செ.வெ.எண்.51 நாள்.29.04.2019

பத்திரிக்கை செய்தி

காஞ்சிபுரம் மாவட்டம் தமிழ்வளர்ச்சித்துறையின் சார்பாக பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளை தமிழ் கவிஞர் நாளாக கொண்டாடுப்படுவதை முன்னிட்டு சங்கப்புலவர்களின் நினைவுத்தூண்களுக்கு அரசு சார்பாக மரியாதை செலுத்தும் வகையில் காஞ்சிபுரம் மாவட்டம் இடைக்கழிநாட்டு நல்லூர் – நல்லூர் நத்தத்தனார் நினைவுத்தூணுக்கு அரசு சார்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் இன்று (29.04.2019) மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாளான ஏப்ரல் 29 தமிழ் கவிஞர் நாளாக தமிழ்வளர்ச்சித்துறை சார்பாக அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழ் கவிஞர் நாளில் சங்கப்புலவர்களின் நினைவுத் தூண்களுக்கு அரசு சார்பாக மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது மற்றும் சங்கபுலவர்களின் நினைவுகளை சிறப்பிக்கும் வகையில் சொற்பொழிவுகளும் அரசு சார்பாக நடத்தப்பட்டு வருகிறது. இதனை முன்னிட்டு காஞ்சிபுரம் மாவட்டம் இடைக்கழிநாட்டு நல்லூரில் அமைந்துள்ள – நல்லூர் நத்தத்தனார் அவர்களின் நினைவுதூணுக்கு அரசு சார்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

காஞ்சிபுரம் மாவட்டம் இடைக்கழிநாட்டு நல்லூர் – நல்லூர் நத்தத்தனார் அவர்கள் இடைக்கழிநாட்டு அரசன் நல்லிய கோடன் அவர்கள் வானளவில் தான் ஈட்டிய புகழினையும் தனதாக்கி தமிழ்க் குடியினைத் தம் பெயரால் வழங்குமாறு மேலோங்கி நின்ற புகழ் வாய்க்கப்பெற்ற ஓவியர். ஓய்மாநாட்டு நல்லிய கோடனைப் பாராட்டி பாடி பெற்ற பாணன் பரிசில் பெற கருதிய பாணனை வழிப்படுத்துவதாக நல்லிசைப் புலவராகிய இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனாரால் அமைக்க பெற்ற செய்யுளே சிறுபாணாற்றுப்படையாகும்.

நல்லூர் நத்தத்தனார் ஓய்மா நாட்டை ஆண்டு கொண்டிருந்த நல்லிய கோடனைப் பாராட்டி பாணாற்றுப்படை ஒன்றை பாடியுள்ளார். இது சிறுபாணாற்றுப்படையாகும். நல்லிய கோடன் ஓவியக் குடியில் பிறந்தவர். இவர் ஆண்ட ஓய்மா நாடு ஐவகை நிலமும் அமையப்பெற்ற நாடாகும். மாவிளங்கை தற்போதைய திண்டிவனத்தினை தலைநகரமாக கொண்டு ஆட்சி புரிந்து வந்தான்.

இவ்வள்ளல்களின் நாட்டுவளம், நகரச்சிறப்பு, உள்ளத்துரன், ஈகையின் ஏற்றம் தமிழர் பண்பாடு முதலிய அருமை பெருமைகளை பாணன் கூறுவதாக இவரது பாடல்கள் அமையப்பெற்றதுள்ளது சிறப்பாகும். இவரை போற்றும் வகையில் இன்றைய தினம் அரசு சார்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் தமிழ்வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் திருமதி. பவானி, இடைக்கழிநாட்டு பேரூராட்சி செயல் அலுவலர் திரு.மத்தியாஸ், சிறப்பு சொற்பொழிவாளாராக அகநம்பி.தி.பாலசுப்பிரமணியன், திரு.தி.சம்பத்குமார், திரு.மு.முனீசுவரான் மற்றும் தமிழ்கவிஞர்கள் பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியிடு,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.